இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 17-09-2024

# ஆணவத்தின் உச்சம் பா.ஜ.க.!

**மதவாதம் - பிளவுவாத சக்தியான பா.ஜ.க.வின் ஆணவத்தின் உச்சம்தான் 'அன்னபூர்ணா' உணவக உரிமையாளரை இழிவுபடுத்திய நிகழ்வு ஆகும். தன்னிடம் வேண்டுகோள் வைத்தார் என்ற ஒரே காரணத்துக்காக - அவரை வரவழைத்து மன்னிப்புக் கேட்க வைத்துள்ளார் 'நீதியற்ற துறை' அமைச்சர் நிர்மலா சீதாராமன். மன்னிப்புக் கேட்கும் காட்சியை பதிவு செய்து, உலகத்துக்கு காட்டி இருக்கிறார் நிர்மலா சீதாராமன். இதன் மூலம் அவமானப்பட்டு நிற்பது அந்த உணவக உரிமையாளர் அல்ல, நிர்மலா சீதாராமன்தான். அதைப் பற்றி எல்லாம் கவலைப்படும் ரகம் அல்ல அவர்.**

கோவை அன்னபூர்ணா உரிமையாளர் சீனிவாசன், ஒன்றிய பா.ஜ.க. அரசின் கொடூர வழிப்பறிக் கொள்கையான ஜி.எஸ்.டி.யை எதிர்க்கவில்லை. ஜி.எஸ்.டி.யை ஏன் போடுகிறீர்கள் என்று கேட்கவில்லை. இது அதிகமான வரியாக இருக்கிறது என்றும் சொல்லவில்லை. அநியாய வரியாக இருக்கிறது என்றும் சொல்லவில்லை. ஜி.எஸ்.டி.யை மொத்தமாக எடுத்து விடுங்கள் என்றும் சொல்லவில்லை. இந்த வரி முறையால் எங்களால் தொழில் செய்ய முடியவில்லை என்றும் சொல்லவில்லை. இதனால் மக்கள் துன்பப்படுகிறார்கள் என்றும் அவர் சொல்லவில்லை. பா.ஜ.க.வை விமர்சிக்கவில்லை. நிர்மலா சீதாராமனை விமர்சிக்கவில்லை.

அவர் சொன்னது, 'எவ்வளவு வரி வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள். ஆனால் எல்லாப் பொருளுக்கும் ஒரே மாதிரி வரியாக போடுங்கள் மேடம்' என்றுதான் அன்னபூர்ணா உரிமையாளர் சொன்னார். இதுவே அநியாயமான கருத்துத்தான். அது இருக்கட்டும்.

"எங்களுக்கு ஒரே ஒரு பிரச்சினைதான் இருக்கிறது. வருகிற மக்கள் சண்டை போடுகிறார்கள். உங்களுக்கு பக்கத்தில் இருக்கும் எம்.எல்.ஏ.வான வானதி சீனிவாசனும் சண்டை போடுகிறார். ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு விதமான ஜி.எஸ்.டி. இருக்கிறது. பன்னுக்கு ஜி.எஸ்.டி. கிடையாது. பன்னுக்குள் இருக்கிற கிரீம்க்கு 18 விழுக்காடு ஜி.எஸ்.டி. இருக்கிறது. வாடிக்கையாளர் என்ன சொல்கிறார்கள் என்றால், பன்னையும் கிரீமையும் தனித்தனியாக கொடுங்க. நாங்களே உள்ளே வைத்து சாப்பிட்டுக் கொள்கிறோம் என்கிறார்கள். எங்களால் கடை நடத்த முடியவில்லை. அதனால் எல்லாத்துக்கும் ஜாஸ்தி பண்ணிடுங்க. இனிப்புக்கு 5 சதவிகித வரி, காரத்துக்கு 12 சதவிகித வரி போடுறீங்க. இதை வானதி சீனிவாசனிடம் கேட்டா, 'வடநாட்டுல இனிப்பு அதிகம் சாப்பிடுறாங்க, அதுனால குறைவு' என்று சொல்கிறார். தமிழ்நாட்டுல ஸ்வீட், காரம், காப்பி இப்படித்தான் சாப்பிடுவோம்" என்று சொல்லி இருக்கிறார் அன்னபூர்ணா உரிமையாளர்.

**"மாநில வாரியாக வரிப் போடுவது இல்லை" என்று அமைச்சர் நிர்மலா சீதாராமன் சொன்னதும், "இந்தியா முழுவதும் ஒரே வரியா ஜி.எஸ்.டி.யை ஏற்றிவிட்டாலும் பரவாயில்லை. ஒரே மாதிரி வரி போடுங்க. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியா வரி போடாதீங்க. ஏனென்றால், பில் போடுவதற்கு கம்யூட்டரே திணறுகிறது" என்று சொல்கிறார் உணவக உரிமையாளர்.**

அதிகப்படியாக வரிப் போடுகிறீர்கள் என்று அவர் சொல்லவில்லை. 'அதிகப்படியாக எவ்வளவு வரி வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள். ஒரே மாதிரி போடுங்கள்' என்றுதான் சொல்கிறார். இதைக் கூட அமைச்சர் நிர்மலாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சிறு ஆலோசனையைக் கூட அந்த ஆணவக் கூட்டத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

**தன்னை வந்து சந்தித்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அமைச்சர் நிர்மலா சீதாராமன் நினைத்ததும், மன்னிப்புக் கேட்கும் காட்சியை வீடியோவாக எடுத்து பொதுவெளியில் பரப்பியதும், ஆணவக்கூட்டத்தின் அக்கிரமங்களுக்கு அநியாய சாட்சியங்களாக வரலாற்றில் பதிவாகி இருக்கிறது.**

நிர்மலா சீதாராமனைப் பற்றித் தெரிந்தவர்களுக்கு இது அதிர்ச்சியான காட்சிகள் அல்ல. பெங்களூரில் ஒரு மாணவர் கேள்வி கேட்டார். 'சிங்கப்பூரில் இப்படி எல்லாம் கேள்வி கேட்க முடியாது' என்று சொன்னவர் இவர்தான்.

**ஜி.எஸ்.டி.யால் என்னென்ன பொருள்கள் எவ்வளவு விலை உயர்கிறது என்று தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொன்னபோது, 'இறுதிச் சடங்கு நடத்துவதற்கு ஜி.எஸ்.டி. வரி விலக்கு' என்று பதில் அளித்தவர்தான் இந்த நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். 'இந்தியாவில் இறுதிச் சடங்கு, உடல் அடக்கம், உடல் தகனம் போன்ற சவக்கிடங்கு சேவைகளுக்கு ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படவில்லை. முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது" என்று நாடாளுமன்றத்தில் 2022 ஆம் ஆண்டு சொன்னவர்தான் அவர். அவரிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?**

கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பேசும்போது குறுக்கிட்ட நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், 'உங்க தமிழ்நாடு' என்றுதான் பதில் சொல்லத் தொடங்கினார். இவரைத்தான் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக கேபினெட் அமைச்சர் ஆக்கி இருப்பதாக பா.ஜ.க. சொல்லிக் கொள்கிறது. அவரே தன்னை தமிழ்நாடு என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுபவர்.

ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு எந்த நிதியும் இல்லை. இதைப் பற்றி கேட்டபோது, "மாநிலங்களுக்கு 1.50 லட்சம் கோடியை வட்டியில்லாத கடனாக தந்திருக்கிறோமே, இது போதாதா?" என்று கேட்டவர் தான் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். 'சம்பளம் கேட்டா, கடனா வாங்கிக்க' என்று சொல்வதைப் போன்ற கொடூரமல்லவா இது? இப்படிப்பட்டவர்,

**ஒரு காட்சியை நினைவூட்டிப் பாருங்கள். உயர் பதவியில் இருந்த ஒரு பெண் வி.வி.ஐ.பி.யை, ஒன்றிய அமைச்சர் அமித்ஷா, பொதுமேடையிலேயே கையை உயர்த்தி கண்டித்தார் அல்லவா? நிர்மலா சீதாராமனை அந்த வி.வி.ஐ.பி. கிண்டலடித்தார் என்பதற்காகத்தான் அது நடந்ததாக பா.ஜ.க.வினரே பேசிக் கொள்கிறார்கள். எத்தகையவர்களிடம் மக்கள் சிக்கிக் கொண்டுள்ளார்கள் என்பதற்கு இவை எல்லாம் உதாரணங்கள்.**

# தொடர்க; தங்களின் சிறப்பான தமிழர் தொண்டு!

## முதல்வருக்கு, இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் – பவள விழாவையொட்டி நெகிழ்ச்சிக் கடிதம் !



**அன்புச் சகோதரர் தலைவர் - முதல்வர் ஸ்டாலின் அவர்களே,**

இனிய வணக்கம்,

அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்ற தாங்கள் அந்நாட்டிலும் வெற்றிக் கொடியை நாட்டியதற்கு முதற்கண் வாழ்த்துகள்.

தமிழகத்தில் உங்கள் மீது எப்படிப்பட்ட அன்பை பொழிகிறார்களோ அதைப் போல அமெரிக்கா வாழ் தமிழர்களின் இதய சிம்மாசனத்தில் இடம் பிடித்து விட்டீர்கள்.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியிலும், அதனை தொழில் மயமாக்கி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெருக்க தன்னலமற்று பாடுபடுகிறீர்கள் என்ற உண்மையை அமெரிக்க வாழ் தமிழர்கள் அறிந்து கொண்டனர். இவ்வாறாக தங்களது பயணத்தின் நோக்கம் வெற்றிகரமாக அமைந்தது.

**கழகத்தின் நீண்ட கால தேவையுணர்ந்து ஆரம்பிக்கப்பட்டது இளைஞர் அணியின் படை, அதற்கு 1980 முதல் உயிரோட்டம் கொடுத்து கழகத்தை எஃகு கோட்டை ஆக்கியதில் உங்களின் தொண்டு அளப்பரியது, உங்களது அர்ப்பணிப்பு உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் கழகத்தின் முப்பெரும் விழாக்களில் தரப்படும் விருதுகளின் வரிசையில், தங்களின் பெயரால் ஓர் விருது அறிவிக்கப்பட்டது பவள விழாவிற்கு மகுடம் சூட்டுவது போல் அமைந்துள்ளது.**

**அவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தஞ்சை தளகர்த்தர் திரு.எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் பொருத்தமான தேர்வு. அவருக்கும், அவரை தேர்ந்தெடுத்த தங்களுக்கும் பாராட்டுகள்.**

பேரறிஞர் அண்ணா கண்ட கழகம், அவரது மறைவுக்கு பின்னர் கட்சி இருக்காது என்று ஆருடம் கூறியவர்கள் பலர், அவர்களது நம்பிக்கைகள் பொய்க்கும் விதமாக கழகத்தின் வெள்ளி விழா, பொன்விழா ஆண்டுகளை வெற்றிகரமாக கண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கலைஞருக்கு பிறகு கட்சி கரைந்துவிடும், வெற்றிடம் உருவாகும் என்று கட்டியம் கூறியவர்கள் பலர், ஆனால் அத்தகையவர்களின் ஆசையில் மண் விழுந்தது. கால வெள்ளத்தில் கழகத்தின் செயல் தலைவராய், பின்னர் தலைவராகி தொடர் வெற்றிகளின் நாயகராகி கழகத்தை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்லும் இவ்வேளையில் கழகத்தின் பவள விழாவை, செப்டம்பர் 17, 2024ஆம் ஆண்டு விமரிசையாக கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது.

இவ்விழா கழகத்தவருக்கு ஓர் திருப்பு முனையாக அமையும் என்பது உறுதி. இந்த பவள விழாவை காண கழகத்திற்கு வித்திட்ட அறிஞர் அண்ணாவும், கழகம் வேரூன்றி, கிளைபரப்புவதற்கு அயராது தன்னலம் இல்லாமல் பாடுபட்ட முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் போன்றோரை இயற்கை அன்னை தன்னிடம் சேர்த்துக் கொண்டாலும், அவர்களது உருவாய், புடம் போட்ட கொள்கைத் தங்கமாக தாங்கள் இருப்பதுதான் என் போன்றோருக்கு ஆறுதலையும், மகிழ்ச்சியையும் தருகிறது.

பேரறிஞர் அண்ணா கண்ட கழகத்தை, அவர் ஏற்றிய கொள்கைத் தீயை அணையாமல் கட்டிக் காத்து உங்கள் கரங்களில் ஒப்படைத்தவர், அண்ணாவின் இதயத்தை இரவலாக பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரது வேள்வியை தாங்கள் வெற்றிக்கரமாக தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறீர்கள். கழகத்தின் ஆணிவேர்களான தொண்டர்களின் பாதுகாவலனாகவும், அவர்களை கொள்கை தங்கங்களாகவும், கழகத்தின் பாதுகாவலர்களாகவும் தொண்டாற்ற ஊக்கமளித்து வருவது தங்களின் அரிய சாதனை.

**அறிஞர் அண்ணா கண்ட கழகத்தின் அடிப்படை கொள்கைகள்தான் கழகத்தை கட்டுகோப்பாக உயிர்ப்புடன் இன்று வரை வைத்திருக்கிறது. 75 ஆண்டுகள் கடந்தும் கழகம் வலிமையுடனும், இளைஞர்களை ஈர்க்கும் வல்லமை உண்டென்றால் அதற்கான அடிப்படைக் காரணம் கழகத்தின் கொள்கைகள்தான். கொள்கைகளை தவிர்த்து தனிமனித துதி பாடலுடன் ஆரம்பித்த பல கட்சிகள் அத்தகையவர்கள் மறைவுக்கு பின்னர் தொண்டர்களின் ஆதரவை இழந்து தள்ளாடுகிறது. கொள்கை அடித்தளம் இல்லா கட்சிகளுக்கு நீண்ட நெடுங்காலம் மக்களின் ஆதரவு கிட்டாது. அதற்கான உதாரணத்தை தற்சமயம் தமிழகத்திலேயே காணலாம்.**

கடந்த காலங்களில் அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் போன்ற கழக முன்னோடிகள் வகுத்த பாதையில் ஆரம்பத்தில் நடந்தோர் அடைந்த வலியை உணர்ந்தால் தான் நாம் அடைந்த வெற்றிகள் மற்றும் நன்மைகளின் அருமை புரியும். கடந்த காலத்தில் பல முன்னோடிகள் மற்றும் தொண்டர்களின் உழைப்பு, வியர்வை, இரத்தம், வேதனை, இவற்றின் விலையே இன்றைய நம் இதமான இனிமையான, இடர்பாடற்ற உன்னதமான வாழ்க்கைப் பயணம் என்பதைத் கழகத்தவரும் குறிப்பாக இளந்தோழர்களும் அறிந்திட வேண்டும் என்பது மிகவும் அவசியமாகும்.

வளரும் தலைமுறை தேவையானதைத் தெரிந்து கொள்ள வேண்டுவது, குறிப்பாக மொழி வரலாற்றினை, கழகம் சந்தித்த இன்னல்களை, போராட்டங்களை, சிறைக் கொட்டடிகளில் தாங்கிக் கொண்ட சித்திரவதைகளை, அடக்குமுறைகளை, இவற்றையெல்லாம் சந்தித்து மீண்டெழுந்த வீரச்சரித்திரத்தை இளைஞர்களும், கழகத்தவரும் மீண்டும் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

கழகத்தின் வீரவரலாற்றை இளைஞர்களும் மற்றவர்களும் அறிந்து கொள்ள நமது இளைஞரணியின் செயலாளர் தம்பி உதயநிதி வட்டந்தோறும் ஓர் படிப்பகம் அமைக்கப்பட வேண்டும் என்று கூறியதோடு மட்டுமல்லாமல் அதற்கு செயல் வடிவம் காண முனைப்போடு பணியாற்றுவது கண்டு மகிழ்கிறேன். அவருக்கு என் வாழ்த்துகள்.

கழகம் வளர்ந்தது கல்லூரிகளில்தான் என்பதை உணர்ந்த தம்பி உதயநிதியின் வழிகாட்டுதலில் மற்றொரு ஆக்கப்பூர்வமான செயல் திட்டமான தமிழக கல்லூரிகள் தோறும் கழகத்தின் வழிகாட்டுதலில் தமிழ் மன்றம் அமைக்கப் பெறும் என்ற செய்தியும் கழகத்திற்கு இளைஞர்களை பெருமளவில் ஈர்க்கவல்லது. மேலும் கழகத்தின் பல்வேறு அமைப்புகளில் இளைஞர்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட அவர் தொடர்ந்து வலியுறுத்தி வருவது மிகச் சிறப்பு. இம் முயற்சிகளின் மூலம் பெரும் பயன் கழகத்திற்கு கிட்டும் என்பதில் ஐயமில்லை. இம்முயற்சிகளின் பலனாக வலுவான முறையில் கழகம் நூற்றாண்டை கொண்டாடும்.

**தம்பி உதயநிதி விளையாட்டு, இளைஞர் நலன் மற்றும், சிறப்பு செயலாக்கத் துறை அமைச்சராகவும் தொண்டு புரிந்து வருகிறார். மிகவும் கவனத்தை ஈர்க்காத விளையாட்டுத் துறைக்கு புத்துயிர் அளித்து, தமிழ்நாட்டை விளையாட்டுகளுக்கு தலைநகராக மாற்றி காண்பித்தது ஓர் அரிய சாதனை. அவரை தங்களுக்கு துணையாக அமைச்சரவையில் இடம் அளித்து மேலும் அவரை சிறப்பாக தொண்டு புரிய ஊக்குவிக்க வேண்டும் என்பது என்னுடைய அவா!.**

**சமூக நீதியின் சரித்திரம் தொடர, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் திராவிட கருத்தியலை ஏந்தி, அறிஞர் அண்ணாவின் பாதையில், இன்று இன்னொரு கலைஞராக திகழும் தாங்கள், மீண்டும் 2026-ல் 200 சட்டமன்றத் தொகுதிகளில் வென்று தமிழக முதல்வராக நீங்கள் மீண்டும் தொடர ஆளுரைப்போம்! மேலும் ஓர் கால் நூற்றாண்டுக்கு கழகத்தின் திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்தால் தமிழகம் உலகளாவிய அளவில் முதல் இடத்தை எட்டும் என்பது திண்ணம். இதுவே பவள விழா செய்தியும், வாழ்த்தாகும்.**

**வாழ்க, வெல்க தி.மு.க.! வெல்க தங்கள் தலைமை!**

**தொடர்க; தங்களின் சிறப்பான தமிழர் தொண்டு!**

இவண்,
**அ. அன்புச் செல்வன்**
13.09.2024

சமூகநீதி நாள்

பிறப்பால் பேதம் கற்பித்து,
தீண்டாமை நிலவிய சமூகத்தில்,
புரட்டுகளுக்குள் புதைந்துகிடந்த அழுக்குகளை
அம்பலப்படுத்தி, இந்த மண்ணில் வாழும்
பெரும்பான்மையான மக்களும்
சுயமரியாதையோடு வாழ்ந்திடும்
வரலாற்றைப் படைத்த புரட்சியாளர்
தந்தை பெரியார் வழிநடப்போம் !
தமிழர் இனமானம் காப்போம் !

மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்



தந்தை பெரியார்
அவர்களின்
146ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
தந்தை பெரியார் அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற,
சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள்.

நாள் : 17.9.2024, செவ்வாய்க்கிழமை நேரம் : காலை 10.00 மணி
இடம் : அண்ணா சாலை, சிம்சன் அருகில், சென்னை

செ.ம.தொ.இ./946/வரைகலை/2024

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in | இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 600 009.